376



சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீமுருகக்கடவுள் திருவடி வாழ்க.

# செந்தமிழ் நாட்டுச் சிறப்பு.

இஃதியற்றினர் :
கல்லல்
ஸ்ரீமணிவாசக சரணாலயசுவாமிகள்

பாகனேரி
திருவாளர் இரு. மு. முத்தையா அம்பலகாரர்
அவர்களால்

திருச்சிராப்பள்ளி :
கோ., டாட்ஸன் அச்சாபீசில்
பிக்கப்பெற்றது.
1925 [அணா 1

V211
N25
148302



உ

சிவமயம்.

# செந்தமிழ் நாட்டுச் சிறப்பு.

க சொக்கர் கடம்பில் வருநாடு சோம
சுந்தர ராண்ட தமிழ்நாடு
மிக்குயர் கன்னி வளநாடு அம்மை
மீனா ளாண்ட தமிழ்நாடு.

உ முருக னாண்ட தமிழ்நாடு கும்ப
முனிவன் வாழுந் தமிழ்நாடு
பெருகு தென்றல் வளர்நாடு அறம்
பேணிப் புரியும் தமிழ்நாடு

௩ சங்கம் வளர்ந்த தமிழ்நாடு சைவ
சாத்திர மோங்கும் தமிழ்நாடு
மங்கள மான தமிழ்நாடு தவம்
வாய்த்துப் பலிக்கும் தமிழ்நாடு

சென்னை-60

௪ போற்றுஞ் சங்கந்தனிற் புல்லும் பொய்யா
புலவர் நாற்பதி னெண்மரொடும் [மொழிப்
எற்ற முறுஞ்சோம சுந்தர நாதனர்
இறைமை பெற்ற தமிழ்நாடு

௫ முத்தி யளிக்குந் தமிழ்நாடு திரி
மூர்த்தி வணங்குந் தமிழ்நாடு
பத்தி யளிக்குந் தமிழ்நாடு மிக்க
பாவத்தைப் போக்கும் தமிழ்நாடு

௬ வீரந் தழைக்கும் தமிழ்நாடு கலி
வெந்நிடுங் கீர்த்தித் தமிழ்நாடு
ஆரந் தழைக்குங் கடற் றண்டுறைகொண்
டழகாய்த் திகழுந் தமிழ்நாடு

௭ சம்பந்தர் வந்த தமிழ்நாடு திருத்
தாண்டக வேந்தர் வளர்நாடு
நம்பி யாரூரர் வருநாடு எங்கள்
நல் வாதவூரர் திகழ்நாடு

௮ மெய்கண்டார் வந்த தமிழ்நாடு சிவ
மேவரு ணந்தி வளர்நாடு
கைகண்ட தோர் மறைஞான சம்பந்தர்
கருது முமாபதி வாழ்நாடு

V241
N125

கூ தொண் டறுபான் மூவர்தந்நாடு மேற்
றொகையடி யார்கள் வருநாடு
பண்டிசைப் பாவேர் து மொன்பதின்மர் மிகு
பத்தியாய் வாழ்ந்த தமிழ்நாடு

க0 பாக்கியம் நாஞ்செய்த பான்மையின லிந்தப்
பாரினிற் கீர்த்தி மிகுந்தோங்கும்
ஆக்கியோ னகிய சேக்கிழார் பெருமான்
அன்பாய் வளர்ந்த தமிழ்நாடு

கக வண்சிரஞ் சோதி தமைக்காணுந் தவ
மன்னியே யெங்கள் தமைப்பேணும்
தண்பரஞ் சோதி மகாமுனிவர் வந்து
தானே யுதித்த தமிழ்நாடு

கஉ பட்டினத்தார் வந்த நன்னடு உயர்
பத்ரகிரி வளர் பொன்னடு
சிட்டர் குமர குருபரரு நற்
சிவப்ரகாசர் வரு நன்னடு

கங தாயு மானவர் வாழ்நாடு அவர்
தந்திடும் பாடல் வளர்நாடு
தூயரான பல தொண்டர்கள் கூட்டந்
தொகுத்து வளர்ந்த தமிழ்நாடு

கச நற்சிவ வாக்கியர் வாழ்நாடு தவம்
நாடிடைக் காடர் வளர்நாடு
பொற்புறு வள்ளுவர் வாழ்நாடு கலைப்
பூவையாம் ஔவை தமிழ்நாடு

௧ரு சிற்றம்பலம் கொண்ட நன்னாடு சிவன்
றாண்டவ மாடுந் திருநாடு
கொற்ற முடனறு பத்துநா லாடல்
குழகன் புரிந்த தமிழ்நாடு

௧௬ தேவார மோங்கும் தமிழ்நாடு திரு
வாசகம் வீசும் தமிழ்நாடு
நாவா ரருங்கலனுந் திருத் தொண்டர்கள்
நல்ல புராணம் வளர்நாடு

௧௭ பத்தித் திருவிளை யாடற் புராணம்
பரவி வளருந் தமிழ்நாடு
நித்தியங் கந்தப் புராண படனம்
நிகழுஞ் சைவத் தமிழ்நாடு

௧௮ மன்னுஞ் சிவஞான போதமுஞ் சித்தியும்
வழிச் சிவப்பிர காசமற்றும்
பன்னும் பதினன்கு சாத்திரஞ் சைவப்
பயிரை வளர்க்கும் தமிழ்நாடு

௧௯ சீரார் கச்சியப்பச் சிவாச் சாரியார்
சீர்த்தியாய் வந்த தமிழ்நாடு
ஏராருஞ் சிவ ஞான முனிவரர்
இன்பமாய் வாழ்ந்த தமிழ்நாடு

௨௦ மன்னுந் திருமுறை பன்னிரண்டு மோங்கி
மங்கள மேறுந் தமிழ்நாடு
பின்னும் பலநூற் ளுருதிகளு மெழில்
பிறங்கத் திகழுந் தமிழ்நாடு

௨௧ வேதந் திகழுந் தமிழ்நாடு மிக்க
மேன்மை யுடைய தமிழ்நாடு
பாதங்க ளுலுந் தருமுய ராகமம்
பண்புட னேங்குந் தமிழ்நாடு

௨௨ மன்னந பாய னபயகுல சோழன்
வந்தெமைக் காத்த தமிழ்நாடு
மின்னு மநுநீதி கண்டதோர் சோழனர்
மேவி வளருந் தமிழ்நாடு

௨௩ தெய்வ முசுகுந்த மன்ன னரசு
சிறக்கப் புரிந்த தமிழ்நாடு
சைவத் திருமுறை தந்தநம்பி யாண்டார்
நம்பி வளர்ந்த நமிழ்நாடு

௨௪ பகரும் வைதிக சைவ சித்தாந்தம்
பரவியே யோங்குந் தமிழ்நாடு
புக ரில்லாத சிவ னடியார்கள்
பொலிந்து வளருந் தமிழ்நாடு

௨௫ சேரனுஞ் சோழனும் பாண்டியன் மூவருஞ்
செங்கோ லோச்சுந் தமிழ்நாடு
பாரறியத் தெய்வ நன்மணம் வீசியே
பத்தி வளருந் தமிழ்நாடு

௨௬ மன்னிடுஞ் சைவ சமயம் வளரவே
பன்முனி வோர்கள் வரும்நாடு
மின்னுஞ் சிவமணம் வீசிக்கதித் தென்றும்
மேலாய் விளங்கும் தமிழ்நாடு

உஎ இன்பம் விளையுந் தமிழ்நாடு நிக
 ரின்றியே யோங்கும் தமிழ்நாடு
 துன்ப மொழியும் தமிழ்நாடு பரி
 சுத்தம தாக்கும் தமிழ்நாடு

உஅ சந்தத் திருப்புகழ் சந்தத மோங்கியே
 தானே தழைக்கும் தமிழ்நாடு
 கந்த ரலங்காரம் கந்த ரனுபூதி
 கந்த ரந்தாதி வளர்நாடு

உகூ எங்க ளருணகிரி நாத ரென்றும்
 இன்பமா யோங்கும் தமிழ்நாடு
 பொங்கி விளங்குறும் பூதிசாத னத்தைப்
 போற்றி வளருந் தமிழ்நாடு

ஙo முத்திப் பதிகள் திகழ்நாடு சீவன்.
 முத்தர்கள் வாழுந் தமிழ்நாடு
 சத்திய மோங்கி வளர்நாடு சிவன்
 றானே தெய்வ மெனும்நாடு

ஙக காவிரி யோங்கி வரும்நாடு சைவம்
 காட்டிய வைகை வளர்நாடு
 மேவும் பொருநை வளப்ப மிகுந்து
 விளங்கித் திகழுந் தமிழ்நாடு

ஙஉ தென்பரங் குன்றங் கொடுங்குன்றங் குற்ருலத்
 தென்பொதி காசலம் வாழ்நாடு
 மின்பாணு ருள் வேலனறு படை
 வீடு திகழுந் தமிழ்நாடு

௩௩ குன்றை முதற்பல குன்றுகளிற் கந்தன்
கோயில் கொண்ட தமிழ்நாடு
என்றைக்குமே முருகேசன் றமிழ்நாட்
டிறையென வோங்கும் தமிழ்நாடு

௩௪ கொல்லி மலையொடு நேரி மலையுங்
குலவியே யோங்கும் தமிழ்நாடு
வல்லியம் பாம்பெனு மாமுனி வோர்களு
மாநடங் கண்ட தமிழ்நாடு

௩௫ ஸ்ரீ ராமாநுசர் வாழ்நாடு திரு
ஆழ்வார் பன்னிருவர்நாடு
ஏரார் நாலாயிரப் பிர பந்தம்
இலங்கித் திகழும் தமிழ்நாடு

௩௬ பாரதம் பாகவத மி ராமாயணம்
பண்புட னோங்கும் தமிழ்நாடு
பாரத மாதா தனக்கிருக்கை யெனப்
பற்றி வளரும் தமிழ்நாடு

௩௭ ஆயிரத் தெட்டுச் சிவாலய மோங்கி
அழகாய் வளருந் தமிழ்நாடு
மாயவனுறு நூற்றெட்டுப் பதிகள்
மன்னி வளருந் தமிழ்நாடு

௩௮ கம்பன் பிறந்த தமிழ்நாடு வசைக்
காளமேகம் வந்த நன்னாடு
உம்பர் புகழும் புகழேந்தி யம்பி
காபதி யோங்கித் திகழ்நாடு

௩௯ கீர்த்தியுடை யொட்டக் கூத்தனு ரோங்கிக்
கிளர்ந்து வளர்ந்த தமிழ்நாடு
சீர்த்திற னேறுமி ரட்டைப் புலவர்கள்
சேர்ந்து வளர்ந்த தமிழ்நாடு

௪௦ வில்லி புத்தூரார் வரும்நாடு கலி
வெல்படிக் காசு வளர்நாடு
அல்லும் பகலுமே யாவர்களுஞ் சிவ
னடியைப் போற்றுந் தமிழ்நாடு

௪௧ காட்டு மியலா மகத்தியத்தோடு தொல்
காப்பிய மோங்கும் தமிழ்நாடு
நாட்டிய பன்னூலும் பின்னூ லாக்கிடும்
நன்னூ லோங்கும் தமிழ்நாடு

௪௨ மற்று மிலக்கணக் கொத்துடனே பல
வாய விலக்கண நூல்களுமே
உற்றுத் திகழ்ந்து வளர்ந்தோங்கு நல்
லுயர்வையே தந்த தமிழ்நாடு

௪௩ சிலப் பதிகாரஞ் சிந்தாமணி மேகலை
சீரிதா யோங்கும் தமிழ்நாடு
பலப்படுங் குண்டல கேசி வளையா
பதியும் வளருந் தமிழ்நாடு

௪௪ சிறிய வைம்பெருங் காப்பியமும் பின்னுஞ்
சேரும் பலவா மிலக்கியமும்
நறிய செந்தமி ழங்கங்க ளாகவே
நாளும் வளருந் தமிழ்நாடு

சரு எட்டுத்தொகை பத்துப் பாட்டுடனே பதி
னெண்ணள வாயதோர் கீழ்க்கணக்கும்
மட்டிலாக் கோவையார் கல்லாட மிவை
மன்னி யோங்கும் தமிழ்நாடு

சசா சாற்று மகம்புறம் நானூறும் நானூறும்
தக்கதோ ரைங்குறு நூறுடனே
ஏற்ற முறும் பலவான விலக்கிய
மின்ப மளிக்கும் தமிழ்நாடு

சஎ ஐந்தணி சூடிடுஞ் செந்தமிழ்ச் செல்விக்
கரங்கம தாகுந் தமிழ்நாடு
மைந்துற லாய புலவர்பெரு மக்கள்
மல்கியே வாழுந் தமிழ்நாடு

சஅ நாலடி யீரடி யான குறளுமே
நன்மை யளிக்கும் தமிழ்நாடு
சீலநல் லாத்திசூடி கொன்றை வேந்தன்
சிறப்பைப் பெற்றோங்குந் தமிழ்நாடு

சகூ நல்வழி நன்னெறி மூதுரையோடு மெய்
நாட்டு நறுந்தொகை யாதியவாம்
பல்வழி காட்டிடும் நீதித் தொகுதிகள்
பற்றி விளங்குந் தமிழ்நாடு

ருO நச்சினார்க் கினியர் சேனா வரையர்
நம்பிளம் பூரணர் தம்முடனே
அச்ச மகற்றும் பரிமேலழகர் பே
ராசிரியர் வளர் நன்னாடு

௫௧ மற்று மடியார்க்கு நல் லாசிரியரும்
மன்னுஞ் சிதம்பர மாமுனியும்
கொற்றமுறும் பல வாசிரியர் தங்கள்
கூட்டங்க ளோங்கும் தமிழ்நாடு

௫௨ மின்னு மௌலி யிளங்கோவடி மன்னன்
மேவிப் பிறந்த தமிழ்நாடு
மன்ன னதிவீர ராமன்வர துங்க
வள்ள லு மோங்கும் தமிழ்நாடு

௫௩ விவேகா னந்த மகாமுனி சென்றுமே
மேனாட்டிற் றன்கொடி நாட்டச்
செவே போகவிடை தந்தநம் பாற்கர
சேதுபதி வளர் நன்னாடு

௫௪ சீமான் பாண்டித்துரை பிறந்தே யெங்கள்
செந்தமிழ் போற்றிடுந் தென்னாடு
பூமான் செந்தமிழ் போற்றும் ராசாளியார்
பூரித்து வந்த தமிழ்நாடு

௫௫ -அரந்தைதீரக் கரந்தைத் தமிழ்ச் சங்க
மன்புடன்றானே நிறுவி வைத்த
சிரந்திக ழெங்கள் ராதா கிட்டினச்
செம்மல் வளர்ந்த தமிழ்நாடு

௫௬ சித்தர்கள் வாழும் தமிழ்நாடு இட்ட
சித்திகள் காட்டும் தமிழ்நாடு
பத்தர்கள் வாழும் தமிழ்நாடு கலைப்
பாக்கிய மோங்கும் தமிழ்நாடு


௫௭ செங்கமல மங்கை வாழ்நாடு கவிச்
சிங்கங்க ளோங்கும் தமிழ்நாடு
வெண்கமல மங்கை வாழ்நாடு ஞான
வித்தக ரோங்கும் தமிழ்நாடு

௫௮ சோப மில்லாத தமிழ்நாடு மற்றைத்
துர்ப்பய மில்லாத் தமிழ்நாடு
பாப மில்லாத தமிழ்நாடு சிவம்
பழுத்த மேன்மைத் தமிழ்நாடு

௫௯ ஆகமத்தார் வுறும் நம் பரமேசுரன்
ஐந்தெழுத் தோங்கும் தமிழ்நாடு
மாகம தோங்கிடுந் தேவரும் வந்திங்கு
வாழ விரும்புந் தமிழ்நாடு

௬௦ வாழிய வாழிய தென்னாடு தினம்
மங்கள மோங்கும் தமிழ்நாடு
வாழிய வாழிய விந்நாடு புகழ்
மல்குந் திருத்தமிழ் நாடிதுவே.

முற்றும். சுபம்.


TRICHY
ROCK